# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஐந்தாம் பத்து

## பத்தாம் திருவாய்மொழி - பிறந்தவாறும்
## ஆழ்வார் தாம் பகவத் குணாநுபவத்தால் உருகும் தன்மை தவிர்ந்து, சேர்ந்து அநுபவிக்கச் செய்யும்படி எம்பெருமானை வேண்டுதல்

** பிறந்த ஆறும் வளர்ந்த ஆறும் *
பெரிய பாரதம் கை செய்து * ஐவர்க்குத்
திறங்கள் காட்டியிட்டுச் *
செய்து போன மாயங்களும் **
நிறந்தன் ஊடு புக்கு எனதாவியை *
நின்று நின்று உருக்கி உண்கின்ற * இச்
சிறந்த வான் சுடரே! *
உன்னை என்று கொல் சேர்வதுவே? 1

வதுவை வார்த்தையுள் ஏறு பாய்ந்ததும் *
மாய மாவினை வாய் பிளந்ததும் *
மதுவை வார் குழலார் *
குரவை பிணைந்த குழகும் **
அது இது உது என்னல் ஆவன அல்ல *
என்னை உன் செய்கை நைவிக்கும் *
முது வைய முதல்வா! *
உன்னை என்று தலைப்பெய்வனே? 2

பெய்யும் பூங்குழல் பேய் முலை உண்ட *
பிள்ளைத் தேற்றமும் * பேர்ந்து ஓர் சாடிறச்
செய்ய பாதம் ஒன்றால் *
செய்த நின் சிறுச் சேவகமும் **
நெய் உண் வார்த்தையுள் அன்னை கோல் கொள்ள *
நீ உன் தாமரைக் கண்கள் நீர் மல்க *
பையவே நிலையும் வந்து *
என் நெஞ்சை உருக்குங்களே 3

கள்ள வேடத்தைக் கொண்டு போய்ப் * புறம்
புக்க ஆறும் * கலந்து அசுரரை
உள்ளம் பேதம் செய்திட்டு *
உயிர் உண்ட உபாயங்களும் **
வெள்ள நீர்ச் சடையானும் * நின்னிடை வேறு அலாமை
விளங்க நின்றதும் *
உள்ளம் உள் குடைந்து * என்
உயிரை உருக்கி உண்ணுமே 4

உண்ண வானவர் கோனுக்கு * ஆயர்
ஒருப்படுத்த அடிசில் உண்டதும் *
வண்ண மால் வரையை
எடுத்து * மழை காத்ததும் **
மண்ணை முன் படைத்து உண்டு உமிழ்ந்து * கடந்து
இடந்து மணந்த மாயங்கள் *
எண்ணும் தோறும் என் நெஞ்சு * எரி வாய்
மெழுகு ஒக்கும் நின்றே 5

நின்ற ஆறும் இருந்த ஆறும் *
கிடந்த ஆறும் நினைப்பு அரியன *
ஒன்று அலா உருவாய் * அருவாய
நின் மாயங்கள் **
நின்று நின்று நினைகின்றேன் * உன்னை
எங்ஙனம் நினைகிற்பன்? * பாவியேற்கு
ஒன்று நன்கு உரையாய் *
உலகம் உண்ட ஒண் சுடரே! 6

ஒண் சுடரோடு இருளுமாய் நின்ற ஆறும் *
உண்மையோடு இன்மையாய் வந்து * என்
கண் கொளா வகை * நீ கரந்து
என்னைச் செய்கின்றன **
எண் கொள் சிந்தையுள் நைகின்றேன் * என் கரிய
மாணிக்கமே! * என் கண்கட்குத்
திண் கொள்ள ஒரு நாள் * அருளாய்
உன் திரு உருவே 7

திரு உருவு கிடந்த ஆறும் * கொப்பூழ்ச்
செந்தாமரை மேல் * திசைமுகன்
கருவுள் வீற்றிருந்து *
படைத்திட்ட கருமங்களும் **
பொருவில் உன் தனி நாயகம் அவை * கேட்கும்
தோறும் என் நெஞ்சம் நின்று நெக்கு *
அருவி சோரும் கண் நீர் *
என் செய்கேன் அடியேனே? 8

அடியை மூன்றை இரந்த ஆறும் * அங்கே நின்று
ஆழ் கடலும் மண்ணும் விண்ணும்
முடிய * ஈரடியால் முடித்துக்
கொண்ட * முக்கியமும் **
நொடியும் ஆறு அவை கேட்கும் தோறும் * என்
நெஞ்சம் நின் தனக்கே கரைந்து உகும் *
கொடிய வல் வினையேன் *
உன்னை என்று கொல் கூடுவதே? 9

கூடி நீரைக் கடைந்த ஆறும் *
அமுதம் தேவர் உண்ண * அசுரரை
வீடும் வண்ணங்களே *
செய்து போன வித்தகமும் **
ஊடு புக்கு எனதாவியை * உருக்கி
உண்டிடுகின்ற * நின் தன்னை
நாடும் வண்ணம் சொல்லாய் *
நச்சு நாகணையானே! 10

** நாகணை மிசை நம் பிரான் * சரணே
சரண் நமக்கு என்று * நாள் தொறும்
ஏக சிந்தையனாய்க் *
குருகூர்ச் சடகோபன் மாறன் **
ஆக நூற்ற அந்தாதி * ஆயிரத்துள்
இவையும் ஓர் பத்தும் வல்லார் *
மாக வைகுந்தத்து *
மகிழ்வு எய்துவர் வைகலுமே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---